BRAMPTON

**Media Release**

உடனடி வெளியிட்டுக்காக

# செல்லப்பிராணிகளுக்கான அவசரகால உணவுப்பொருள் சரக்ககம் மூலமாக ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான சேவைகள் அமைப்பு தனது ஆதரவை விரிவுபடுத்துகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 14, 2022) – செல்லப்பிராணிகளுக்கன உணவு, பூனைகளுக்கான கழிவகற்றும் பெட்டி மற்றும் விலங்குகளுக்கான அத்தியாவசியமான வழங்குபொருட்களின் தேவை கொண்ட ப்ராம்ப்ட்டன் நகர செல்லப்பிராணி வைத்திருப்போருக்கு ஆதரவளிப்பதற்காக, அவசரகால செல்லப்பிராணி உணவுகளுக்கான சரக்ககத்தை ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான சேவை அமைப்பினர் துவக்கியுள்ளனர்.

அவசரகால செல்லப்பிராணி உணவுகளுக்கான சரக்ககமானது, தேவைகள் மற்றும் நன்கொடைகளைச் சார்ந்து, ஒரே சமயத்தில், ஒரு வாரம் முதல் ஒரு மாதத்திற்கான செல்லப்பிராணி வழங்குபொருட்களை அளித்து ஆதரவளிக்க இலக்கு கொண்டுள்ளது. இந்த முனைப்பை சாத்தியப்பட வைப்பதற்காக ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான சேவை அமைப்பினர் PetValu மற்றும் FreshCo ஆகிய நிறுவங்களுடன் கைகோர்த்துள்ளனர்.

905.458.5800 என்ற எண்ணை அழைப்பதன்மூலம் அல்லது animal.services@brampton.ca க்கு மின்னஞ்சல் செய்வதன் மூலம் அவசரகால செல்லப்பிராணி உணவுகளுக்கான சரக்ககத்திற்கு ஆதரவளிக்க வியாபாரிகள் அழைக்கப்படுகிறார்கள்.

எண் 475 கிறிஸ்லர் ட்ரைவ் இல் அமைந்துள்ள ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான காப்பகத்தில் பூனைகள், நாய்கள் மற்றும் இதர சிறு வீட்டு விலங்குகளுக்கு என, சீலிடப்பட்ட, உலர்ந்த செல்லப்பிராணி உணவுகளை குடியிருப்புவாசிகள் நன்கொடையாக வழங்கலாம். தேவைப்படும் பொருட்கள் கொண்ட பட்டியலுக்கு ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான காப்பகத்தின் அமேஸான் விருப்ப உணவுப் பட்டியலைப் பார்க்கவும் அல்லது ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான காப்பகத்தின் Facebook பக்கத்தைப் பார்க்கவும்

விலங்குகளுக்கான சேவை அமைப்பின் பிரதிநிதியுடன் பேச 905.458.5800 என்ற எண்ணில் அழைப்பது Animal.Services@brampton.ca, க்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் அல்லது ஆன்லைன் வழியாக ஒரு படிவம் சமர்ப்பிப்பதன் மூலமாக அவசரகால செல்லப்பிராணி உணவுக்கான சரக்ககத்தை செல்லப்பிராணி

வைத்திருப்பவர்கள் அணுகலாம். ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான சேவை அமைப்பினர் இந்தப் பொருட்களை பொட்டலம் கட்டி வைப்பார்கள் மற்றும் சேகரித்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல் வழங்குவார்கள். செல்லப்பிராணிகளை வைத்திருப்போர், தாங்கள் வைத்திருக்கும் பிராணியின் வகை, அவற்றின் எண்ணிக்கை, அவற்றின் வயது , அவற்றுக்கு தேவைப்படுவது டப்பாவில் அடைத்த உணவா அல்லது அரைத்த உணவா என்பதுடன், தங்கள் செல்லப்பிராணிகளைப் பராமரிக்கத் தேவையான வேறு ஏதும் கூடுதல் பொருட்கள் தேவையா எனவும்  கூற வேண்டும்.

அவசரகால செல்லப்பிராணி உணவுக்கான சரக்ககத்தைப் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/animalservices.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான சேவை அமைப்பினரின் அவசரகால செல்லப்பிராணி உணவுக்கான சரக்ககமானது, ப்ராம்ப்ட்டன் நகர் முழுவதிலுமாக செல்லப்பிராணிகள் வைத்திருப்போருக்குத் தேவையான முக்கிய வழங்குபொருட்களை, அதுவும் இந்த இக்கட்டான சமயத்தில் வழங்கி ஆதரவு அளிக்கும். செல்லப்பிராணிகளையும் அவற்றின் உடைமையாளர்களையும் சேர்த்தே வைப்போமாக- எங்கள் குழுவை அணுகுமாறு தேவை கொண்டோரை நான் உற்சாகப்படுத்துகிறேன்.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“அவசரகால செல்லப்பிராணி உணவுக்கான சரக்ககமானது சமுதாயத்தில் தங்கள் வசம் இருக்கும் பொருட்களைப் பகிர்ந்து செல்லப்பிராணிகளை சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் வைக்க உதவுகிறது. இந்த முயற்சியானது சமுதாயத்தின் தாராள மனப்பான்மையைப் பொருத்தே இருக்கிறது. இந்த திட்டத் திற்கு உதவும் எண்ணம் கொண்ட வியாபாரிகள் மற்றும் குடியிருப்புவாசிகள் செல்லப்பிராணிகளுக்கு அத்தியாவசியமான பொருட்களை நன்கொடையாகத் தந்து ஆதரவளிக்கலாம்”

- *ஜெஃப் பவ்மன், நகர கவுன்சிலர் வார்டுகள் 3 & 4; தலைவர், சட்டவடிவாக்கல் சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“அவசரகால செல்லப்பிராணி உணவுக்கான சரக்ககத்தை சாத்தியமாக்க உதவிய நமது நன்கொடையாளர்கள்  மற்றும்  கூட்டு சேருபவர்களுக்கு நன்றி. இந்த முனைப்பானது, இந்த இக்கட்டான சூழலில், நமது ஒட்டுமொத்த சமுதாயத்தையும் அரோக்கியமாக மற்றும் பாதுகாப்பாக வைப்பதில் முக்கிய அங்கம் வகிக்கிறது. உங்கள் செல்லப்பிராணிகளுக்கான ஆதரவு வேண்டுமெனில், எங்களை அணுகவும்.”

- *டக் வில்லான்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 2 & 6; துணைத் தலைவர், சட்டவடிவாக்கல் சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

**BRAMPTON**

**Media Release**

"நமது மாநகரத்தில் இருக்கின்ற அனைத்து விலங்குகளுக்கும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பினை வழங்க நமது ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான சேவை அமைப்பினர் அர்ப்பணிப்பு கொண்டுள்ளனர். அவசரகால செல்லப்பிராணி உணவுக்கான சரக்ககமானது, செல்லப்பிராணி வைத்திருப்போருக்கு அவர்களின் செல்லப்பிராணிகளுக்கான ஆதரவு அளிப்பதுடன், அவற்றை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாக வைத்திருப்பதை உறுதி செய்கின்றது."

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். [*Twitter*](), [*Facebook*](), மற்றும் [*Instagram*]() ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
குர்வீந்தர் சிங்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம் 905-874-3426 |
Monika.Duggal@brampton.ca